00067

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்
சட்டக்கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம்
மட்டம் - 04
**LLU4708**– அரசியலமைப்பு சட்டம் **II**
தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை II - 2023/2024
காலம் : ஒரு (01) மணித்தியாலம்

**திகதி : 11.01.2025** **நேரம்: மு.ப 11.30 - பி.ப 12.30**

மொத்த வினாக்களின் எண்ணிக்கை இரண்டு (02).
ஒரு (01) வினாவிற்கு மாத்திரம் விடையளிக்குக.
தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. அமல் எனும் தொழிற்சங்கம் ஒன்றின் தலைவர் ஒருவர் பொலிஸ் ஒருவரால் 2024 டிசம்பர் 07 இல் காலி முகத்திடலின் கிறீன்பார்க் இல் அமைதியான முறையில் போராட்டம் மேற்கொண்ட போது, கைது செய்யப்பட்டான். தனது கைதிற்கான காரணங்களை பொலிஸிடம் அமல் வினவிய போது, அவர்கள் ஏதேனும் காரணங்களை வழங்க மறுத்தனர். பொலிஸ் அலுவலர்கள் அமலை திட்டிதுடன், அவர்களது வாகனத்திற்குள் அவனை பலவந்தமாக அழைத்துச் சென்றனர். பொலிஸ் நிலையத்திற்கு செல்லும் போது, அமல் பொலிஸ் அலுவலர்களால் தாக்கப்பட்டு அறையப்பட்டான். பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்ற பின்னர், அவன் சிறை வைக்கப்பட்டான். அவன் தடுப்புக் காவலில் இருக்கும் போது, பொலிஸ் அலுவலர்களால் தொடர்ந்தும் விசாரிக்கப்பட்டான். அவன் விசாரிக்கப்பட்ட போது, அவன் உடலியல் ரீதியான தாக்குதலிற்கும் உள்ளாகினான். அவன் தடியால் தாக்கப்பட்டான். அவனது தூக்கத்தை அழிக்கக்கூடிய வகையில் கடுமையான பிராகாசமுடைய விளக்குகள் உள்ள அறை ஒன்றில் வைக்கப்பட்டான். அமல் பருகுவதற்கு சிறிது தண்ணீர் கோரிய போது, பொலிஸாரால் மறுக்கப்பட்டான். மறுநாள், எவ்வித குற்றமும் தாக்கல் செய்யப்படாது அவன் விடுவிக்கப்பட்டான். இத்தகு சூழ்நிலைகளிற்கு கீழ், அமல் பொலிஸாருக்கு எதிராக அடிப்படை உரிமைக்கான மனு ஒன்றை தாக்கல் செய்ய நாடுகிறான். அவனிற்கு அறிவுறுத்துக. உமது விடை பொருத்தமான அரசியலமைப்பு உறுப்புரைகள் மற்றும் ஏதேனும் வேறு பிற தொடர்புடைய சட்ட அதிகாரங்களாலும் ஆதாப்படுத்தப்பட வேண்டும்.

   **(20** புள்ளிகள்)

2. "... சில நுணுக்கமான வழக்குகளில், நிறுவனம் அல்லது நபர் ஒருவரது "நிறைவேற்று" பண்பையும், "நிறைவேற்று" அதிகாரத்தின் அளவையும் சுட்டிக்காட்டுதலானது, அவசியமானதாகவும் நியாயப்படுத்தக் கூடியதாகவும் காணப்படினும் கூட, இறுதியாக தீர்மானம் ஆனது "நிறைவேற்று அல்லது நிர்வாக" ரீதியான செயலா என்பதிலேயே தங்கியுள்ளதே அன்றி, நிறுவனத்தின் அல்லது அலுவலரது அந்தஸ்த்தில் அல்ல"

   **Fernando J, in *Parameswary Jeyathewan v. Attorney General and Others* [1992] Sri L.R. 371**

   மேலேயுள்ள கூற்றின் அடிப்படையில், இலங்கையில் அடிப்படை உரிமைகளின் கீழ் நிறைவேற்று அல்லது நிர்வாக வழக்கின் பொருளினது பரப்பினை நீதித்துறை எவ்வாறு பொருட்கோடல் செய்துள்ளது எனக் கணிக்குக. உமது விடை பொருத்தமான அரசியலமைப்பு உறுப்புரைகளாலும், வேறு பிற தொடர்புடைய சட்ட அதிகாரங்களாலும் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

   **(20** புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமை பெற்றது -